# சமூக அறிவியல்

## மூன்றாம் வகுப்பு
### முதல் பருவம்


பாடநூல் குழு

அ. கலைவாணி,
ஊ.ஒ.ந .பள்ளி, காளம்பாளையம்,
தொண்டாமுத்தூர்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

டி. பரிமேலழகன்,
அ.உ. நி. பள்ளி, பெரும்பாக்கம்,
விழுப்புரம் மாவட்டம்.

ஆர். விஜயலஷ்மி
ஊ.ஒ.தொ.பள்ளி, சித்தருகாவூர்,
தெள்ளாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

எம். அமுதா
சென்னை தொடக்கப் பள்ளி,
திருவான்மியூர்.

என். இளஞ்செழியன்
ஊ.ஒ.தொ. பள்ளி,வி.எஸ். மடம்,
போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

ச. ரவிசங்கர்
ஆசிரியர் பயிற்றுநர்,திருத்தணி.

இந்திரா கோசல் ராம்
அ. மே. பள்ளி, பேரங்கியூர்,
விழுப்புரம் மாவட்டம்

சு. சித்ரா,
அ.உ.நி. பள்ளி, 17, அஸ்தினாபுரம்,
காட்டாங்கொளத்தூர் ஒன்றியம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

அர. நிதானம்
ஊ.ஒ.தொ. பள்ளி,குதிரைச்சந்தல்
சின்னசேலம் ஒன்றியம்,விழுப்புரம் மாவட்டம்.

இ. தமிழழகன்,
ஊ.ஒ.ந.பள்ளி, கொட்டையாம்பூண்டி,
விக்கிரவாண்டி ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

கே. கல்யாணி,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி,
தொட்டப்பாடி, விழுப்புரம் மாவட்டம்.

ரா.ஈஸ்வரி,
இந்து நாடார் ஆரம்பப் பள்ளி,
காமாட்சிபுரம், தேனி மாவட்டம்.

எ. ரஜினி,
சென்னை தொ. பள்ளி, கொளத்தூர், சென்னை.

வல்லுநர் குழு

திரு. சீ. மோகன் குமாரமங்கலம், பெருந்தலைவர் காமராசர் அரசு கல்வியியல் கல்லூரி, காரைக்கால், புதுச்சேரி.
திருமதி. அருணா இரத்தினம், கல்வி திட்ட அலுவலர், யுனிசெப், அடையார், சென்னை.
திரு. மா. திருநாவுக்கரசு, மேனாள் தலைமையாசிரியர், அ. உ. பள்ளி, முண்டியம்பாக்கம், விழுப்புரம் மாவட்டம்.

குழுத் தலைவர்

தேசிய நல்லாசிரியர் திருமதி. ஆர்.மாலதி, அனைவருக்கும் கல்வி இயக்கம், சென்னை.

ஓவியம்

திரு. அர. பாலசுப்ரமணியன்,ஓவிய ஆசிரியர், அ.மே.நி,பள்ளி, சுருளிப்பட்டி,கம்பம், தேனி மாவட்டம்.

கணினி அச்சு
கபிலன் மாரடோனா

ஓவியம்
மோ.ஜான் ராஜா, கடலூர் மாவட்டம்.
சு.மனோகரன், தேனி மாவட்டம்.

வடிவமைப்பு
திரு. அர. யுவராஜ்

நண்பர்க்கு

வாழ்க்கையோடு இணைந்த கல்வியை மாணவர்களுக்கு அளிக்கும் புதிய பாடப்புத்தகம் உங்களுக்காகவும், குழந்தைகள் பயன்பாட்டிற்கும் ஏற்ப வடிவமைக்கப்பட்டு உள்ளது.

இதில்...

மாறுபட்ட புதிய கோணத்தில் பாடங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. குழுக் கற்றலுக்கும் கலந்துரையாடலுக்கும் உதவும் வகையில் பயிற்சிகள் அமைக்கப்பட்டு உள்ளன. சூழலுக்கு ஏற்ப நீங்கள் கொடுக்கும் பயிற்சிகள் கற்றலை மேலும் இனிமையாக்கும், எளிமையாக்கும், வலுவூட்டும்.

குழந்தைகள் புத்தகத்திலேயே செய்யும் வகையில் பயிற்சிப் பகுதிகள் அமைக்கப்பட்டு உள்ளன.

நேரடி அனுபவங்களில் இருந்து பார்த்த, கேட்ட, உணர்ந்தவற்றை வெளிப்படுத்த ஒரு களமாக இந்தப் புத்தகம் அமையும்.

- விதிகளைப் புரிந்துகொள்ள
- அனைவரிடமும் இனிமையாகப் பழக
- தன்னைச் சுற்றி நடப்பவற்றை உற்று நோக்கி புரிந்துகொள்ள
- திசைகளைத் தெரிந்துகொள்ள
- சாலை விதிகளை அறிந்து கடைபிடிக்க
- பயணத்துக்காக திட்டமிட, போக்குவரத்து சாதனங்களைத் தெரிந்துகொள்ள
- உணவின் வகை, உணவே மருந்து எனத் தெரிந்துகொள்ள
- ஒவ்வொரு துறையும் தொழிலும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு உடையது என உணர்ந்துகொள்ள
- நமது மாவட்டத்தைப் பற்றி விவரம் சேகரிக்க
- நில அமைப்புகளைப் புரிந்துகொள்ள
- இயற்கையை ரசிக்க
- படித்து மகிழ, செய்து மகிழ

உங்கள் நண்பனாய் உதவும் இப்புத்தகம் ஒரு வழிகாட்டியே. இந்நண்பனின் உதவியுடன் உங்களது சிறந்த அனுபவத்தைப் பயன்படுத்தி, வகுப்பறையை உயிரோட்டம் உள்ளதாக மாற்றுவோமா ?



# 1. எனக்குப் பிடித்த உலகம்



நான் மீனா,



**எனது வீட்டில்...**

**இனிமையாகப் பாடப் பிடிக்கும்.**
**சுவையாகச் சாப்பிடப் பிடிக்கும்.**
**பாட்டியிடம் கதை கேட்கப் பிடிக்கும்.**
அம்மா, அப்பாவுடன் உலாவச் செல்லப் பிடிக்கும்.
அண்ணனுடன் சேர்ந்து வேலைகளைச் செய்யப் பிடிக்கும்.



**எனது சுற்றுப்புறத்தில்...**

**அக்கம் பக்கத்து நண்பர்களுடன் விளையாடப் பிடிக்கும்.**
**கடைத் தெருவிற்குச் செல்லப் பிடிக்கும்.**
**பூங்காவில் ஊஞ்சலாடப் பிடிக்கும்.**
**சின்னச் சின்ன குறும்புகள் செய்யப் பிடிக்கும்.**
**மைதானத்தில் சிறிய மிதிவண்டி ஓட்டப் பிடிக்கும்.**



## எனது பள்ளியில்...



செடிகளை நட்டு வளர்க்கப் பிடிக்கும்.
ஆசிரியர் என்னைப் பாராட்டுவது பிடிக்கும்.
கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளப் பிடிக்கும்.
பள்ளியில் போட்டி போட்டு வேலைகள் செய்யப் பிடிக்கும்.
பள்ளி நண்பர்களுடன் மாலையில் குழுவாய் விளையாடப் பிடிக்கும்.

**மீனாவைப் போல, உனக்கு என்னென்ன செய்யப் பிடிக்கும் ? எழுது.**
**உன்னுடைய...**

| வீட்டில் | சுற்றுப்புறத்தில் | பள்ளியில் |
| --- | --- | --- |
| | | |
| | | |
| | | |



லதா, ஜமால், ஜான், மேரி இவர்களும் உன்னைப் போலவே மூன்றாம் வகுப்பில் படிக்கின்றனர். வெவ்வேறு சுற்றுப்புறத்தில் வசித்து வருகிறார்கள். அவர்கள் கூறுவதைக் கேட்போமா ?



நான் லதா.
என் பெற்றோருடன் கிளாப்பாக்கம்
கிராமத்தில் வசிக்கிறேன். எங்கள் வீட்டில்
ஒரு பசு மாடும் உள்ளது.



என் பெயர் ஜமால்.
நானும் என் அண்ணனும் எங்கள்
தாத்தா பாட்டியுடன் நாகூரில்
வசிக்கிறோம்.



நான் ஜான். நானும் எனது
தங்கை மேரியும் அத்தை மாமாவுடன்
வசிக்கிறோம். எங்கள் வீடு
தாம்பரத்தில் அடுக்கு
மாடிக் குடியிருப்பில் உள்ளது.

நீ எங்கு, யாருடன் வசிக்கிறாய் ?
உன்னை வரைந்து எழுது.

இதைப் போல கூட்டுக் குடும்பம், தனிக் குடும்பம், சிறிய குடும்பம், பெரிய குடும்பம் எனப் பல வகையான குடும்பங்கள் உண்டு.

உன் குடும்பம் தனிக் குடும்பமா? கூட்டுக் குடும்பமா ? ____________________



என் குடும்பம் எனக்கு மிகவும் பிடிக்கும். என் அம்மா, நான் பள்ளியிலிருந்து வந்தவுடன் என்னை அன்பாக அணைத்துக் கொள்வார். பள்ளியில் நடந்தவற்றைப் பொறுமையுடன் கேட்பார். என் அண்ணன், என்னுடன் அடிக்கடி போட்டி போடுவான். எனக்குக் கோபம் வரும், என் தாத்தா சமாதானம் செய்துவைப்பார். எங்களுடைய பெற்றோர் எங்கள் மேல் தனிக் கவனம் செலுத்துகின்றனர். என் வீட்டில் என்னால் சுதந்திரமாகச் செயல்பட முடியும்.

வீட்டில் உன்னுடைய செல்லப் பெயர் என்ன ? ____________________

நீ வீட்டில் பேசும் மொழி எது ? ____________________

உனக்கு அழுகை வந்தால் உடனே யாரைத் தேடிச் செல்வாய் ? ____________________


பயம் வந்தவுடன் யார் பின்னால் ஓடி ஒளிந்து கொள்வாய் ? ____________________

உடல் நலம் இல்லாத போது யார் உன் அருகில் இருக்க வேண்டும் என நினைப்பாய் ? ____________________

தெரியாமல் தவறு செய்தால், அதைத் தைரியமாக ஒப்புக் கொள்வாயா ? யாரிடம் ?

____________________

மீனா தன் விரல்களின் ரேகைகளை ஒரு தாளில் பதித்தாள். அதைத் தன் குடும்ப உறுப்பினர்களின் உருவங்களாக மாற்றி அமைத்துள்ளாள்.



இது போல நீயும் உன் வீட்டில் உள்ளவர்களின் உருவங்களை உருவாக்கு.

## உன்னுடைய வீட்டில் கேட்டு விவரம் சேகரி.



உன் தாத்தா சிறு வயதில் எந்த ஊரில் வசித்தார் ?

______________________________________________

உன் பாட்டி சிறு வயதில் வசித்த ஊர் எது ? ______________________

அவர்கள் சிறு வயதில் நண்பர்களுடன் விளையாடிய விளையாட்டுகள் எவை ?

______________________________________________

அவர்களுடைய நண்பர்களின் பெயர்களைக் கேட்டு எழுது.


______________________________________________


விளையாட்டில் நடந்த சுவையான நிகழ்ச்சிகள் பற்றி அவர்களிடம் விவரம் சேகரி.

அக்கால விளையாட்டுகள் இன்றும் நடைமுறையில் உள்ளனவா ?

இல்லை எனில் அவ்விளையாட்டுகள் குறித்து கேட்டு வா.

______________________________________________





அவற்றில் நீ விளையாடும் விளையாட்டுகள் எவை ?

______________________________________________

உனக்கு மிகவும் பிடித்த விளையாட்டு எது ? ஏன் ?______________________

______________________________________________

தனியாக விளையாடுவாயா ? நண்பர்களுடனா ?______________________

யார் யாருடன் விளையாடுவாய் ?

| பள்ளியில். . . | வீட்டிற்கு அருகில் . . . |
|---|---|
| ______________ | ______________ |
| ______________ | ______________ |
| ______________ | ______________ |



நம் வீட்டில் அனைவரிடமும் அன்புடன் பழகவும் விருப்பமான வேலைகளைச் செய்யவும் நினைத்ததைப் பேசவும் முடியும்.

இது, சுமதி, சரண் வீடு. தம் அம்மா, அப்பாவுடன் அவர்கள் வீட்டு வேலைகளைப் பகிர்ந்து செய்வதைப் பாருங்கள்.









நீ உன் குடும்பத்தினருக்கு என்னென்ன உதவிகளைச் செய்வாய்?

______________________ ______________________

______________________ ______________________

______________________ ______________________


விடுமுறை நாட்களை உன் குடும்பத்தினருடன் எப்படி இனிமையாகக் கழிப்பாய்?

______________________ ______________________

______________________ ______________________

உன் வீட்டின் படம் வரை. அதைச் சுற்றி உனக்குப் பிடித்த மரம், செடி, கொடிகளை வரைந்து அழகு செய்.













# 2. எனது சுற்றுப்புறம்

நாம் வாழும் பகுதியில் பல வகையான மக்கள் நம்முடன் சேர்ந்து வாழ்கிறார்கள். இம்மக்களின் தேவைக்காக சாலைகள், இருப்புப்பாதை, கடைத் தெரு, வழிபாட்டுத் தலங்கள் முதலியன அமைந்துள்ளன. இது போல உனது சுற்றுப்புறத்தில் என்னென்ன உள்ளன ? கூறுக. **லதா, ஜமால், ஜான் மற்றும் மேரியின் சுற்றுப்புறத்தைப் பற்றி அவர்கள் கூறுவதைக் கேட்கலாமா ?**



லதா


நாங்கள் கிளாப்பாக்கத்தில் வசிக்கிறோம். இந்த இடத்தில் சாலை ஐந்து கிளைகளாகச் செல்வதால் இப்பெயர் வந்தது. இங்கு நிறைய வீடுகள் உள்ளன. எங்கள் தெருவில் ஒரு குடிநீர்க் குழாயும் ஒரு நியாயவிலைக் கடையும் உள்ளன. எங்கள் வீட்டிற்கு அருகில் ஒரு சிறிய மளிகைக் கடை உள்ளது. சில நேரங்களில் என் அம்மா அந்தக் கடையிலிருந்து மிட்டாய் வாங்கித் தருவார்கள். அப்பா சென்னையில் ஒரு சிற்றுண்டிச் சாலையில் வேலை செய்கிறார். விடுமுறை நாளில் மட்டும் வீட்டிற்கு வருவார்.

கலாவும் வானதியும் என்னுடைய தோழிகள். நாங்கள் சேர்ந்து பள்ளிக்குச் செல்வோம். மாலையில் 'பாண்டி' விளையாடுவோம். என் தோழிகளின் பெற்றோர் விவசாயிகள். எங்கள் தெருவில் வசிப்பவர்கள் ஒன்று சேர்ந்து அனைத்து விழாக்களையும் கொண்டாடுவோம். நாங்கள் ஒருவருக்கொருவர் இனிப்புகள் வழங்கி மகிழ்வோம்.

லதாவின் தோழிகள் யார் யார் ?

லதாவின் வீட்டைச்சுற்றி என்னென்ன அமைந்துள்ளன ?

தான் வசிக்கும் பகுதியில் உள்ளவர்களுடன் சேர்ந்து லதா என்னென்ன செயல்களைச் செய்கிறாள் ?



ஜமால்



அம்மாவும் நானும் சித்தி சித்தப்பாவுடன் சேர்ந்து வாழ்கிறோம். நாங்கள், எங்களுடைய தாத்தா பாட்டி வீட்டில் நாகூரில் ஒன்றாக வசிக்கிறோம். நாங்கள் மீனவக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். எங்கள் வீடு கடற்கரை ஓரத்தில் அமைந்து உள்ளது. எங்கள் பழைய வீடு பழுதாகிவிட்டது. எனவே, நாங்கள் புதிய வீடு கட்டியுள்ளோம். தற்போது புதிய வீட்டைச் சுற்றி மரங்கள் வளர்த்து வருகிறோம். எங்கள் தெருவில் 30 வீடுகள் உள்ளன. இங்கு வசிப்பவர்களில் பெரும்பாலானோர் மீனவர்கள்.

ஜமால் யார் யாருடன் வசித்து வருகிறான் ?

ஜமாலின் வீடு எங்கு அமைந்துள்ளது ?

ஜமாலின் சுற்றுப்புறத்தை வரைபடமாக வரை.

மேரி



நானும் மேரியும் எங்கள் அத்தையுடன் வாழ்கிறோம். எங்கள் வீடு தாம்பரத்தில் உள்ளது. எங்கள் அடுக்கு மாடிக் குடியிருப்பில் 40 குடும்பங்கள் உள்ளன. எனது பெற்றோரின் வேலை, பள்ளி செல்லாக் குழந்தைகளைக் கண்டறிந்து பள்ளியில் சேர்ப்பது. அவர்கள் அதிக நாள் வெளியூர் செல்ல வேண்டியுள்ளது. எனவே, நாங்கள் எங்கள் அத்தையுடன் தங்கியுள்ளோம். எங்கள் குடியிருப்பைச் சேர்ந்த குழந்தைகள் அனைவரும் மாலையில் சேர்ந்து விளையாடுவோம். ஆனால், நாங்கள் வேறு வேறு பள்ளிகளில் படிக்கிறோம். மேரிக்கு வண்டலூர் விலங்கியல் பூங்கா மிகவும் பிடிக்கும். ஏனென்றால், அங்கு மரங்களும் விலங்குகளும் அதிகமாக உள்ளன.



ஜான்

ஜான், மேரியின் வீடு எங்குள்ளது ?

அவர்கள் ஏன் அத்தையுடன் வசிக்கின்றனர் ?

மேரிக்கு ஏன் வண்டலூர் பூங்காவை மிகவும் பிடிக்கும் ?

நீ வாழும் பகுதி இவர்களில் யாருடையதைப் போன்றது ?

அவர்கள் கூறுவதைப் போல் நீ வாழும் பகுதியைப் பற்றி உன்னால் எழுத முடியுமா ? ஆசிரியர் உதவியுடன் எழுது.

படத்தைப் பார். நீ எவ்வாறு நடந்து கொண்டால், உன் அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு உன்னைப் பிடிக்கும்?












______________________________________________

______________________________________________

______________________________________________

உன் வீட்டிற்கு அருகில் வசிப்பவர்களில் உனக்குப் பிடித்தவர்கள் யார்? யார்? ஏன் பிடிக்கும்? அவர்கள், எல்லோரிடமும் எப்படிப் பழகுகின்றனர்?





## உன் வீட்டில் / அக்கம் பக்கத்தில் உள்ள முதியவர்களிடம் கேட்டு விடையை எழுது.

| கேட்க வேண்டிய கேள்வி | உன் வீட்டில் | உன் நண்பனின் வீட்டில் |
|---|---|---|
| எத்தனை ஆண்டுகளாக இப்பகுதியில் வசிக்கிறீர்கள் ? | | |
| உங்கள் வீட்டிற்கு அருகில் உங்களுக்குப் பிடித்த இடங்கள் இரண்டு | | |
| உங்கள் பகுதியில் இல்லாத, ஆனால் அவசியம் தேவை என நீங்கள் நினைக்கும் வசதிகள் | | |



### எனது பள்ளியில் . . .




நம் வீட்டிற்கு அடுத்து, நாம் அதிக நேரம் இருக்கும் இடம் பள்ளி. அதனால், ஆசிரியர்களுடனும் சக மாணவர்களுடனும் நன்கு பழக வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே, பள்ளியையும் ஒரு குடும்பம் எனலாம்.




பள்ளியின் அனைத்து அலுவல்களும் தலைமை ஆசிரியரின் மேற்பார்வையில் நடைபெறுகின்றன. இங்குள்ள ஆசிரியர்கள் நமக்குப் பாடங்களை அன்புடனும் பொறுமையுடனும் கற்றுத் தருகின்றனர். நல்ல நடத்தை, மற்றவர்களுடன் கலந்து பழகுதல், தனித்திறன்கள் போன்றவற்றையும் வளர்க்க உதவுகின்றனர்.


பெரிய பள்ளிகளில், அலுவலர்கள் பள்ளிப் பதிவேடுகளைப் பராமரிக்கின்றனர். அரசுப் பள்ளிகளில் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்குவதைச் சத்துணவு அமைப்பாளர் கவனித்துக் கொள்கின்றார். பள்ளியின் அலுவலக உதவியாளரும் காவலாளியும், நாம் பள்ளியில் பாதுகாப்பாகப் படிக்க உதவுகின்றனர்.




இது போல் உன் பள்ளியில் நீங்கள் பின்பற்றும் செயல்கள் எவை? அவற்றில் நீ பின்பற்ற வேண்டிய முக்கியமான செயல் என எதை நினைக்கிறாய்? ஏன்?




இந்த அறிவிப்புப் பலகைகளில் உள்ள வாசகங்களைப் பார். இவை எதற்காக வைக்கப்பட்டு உள்ளன ? இவற்றால் ஏற்படும் நன்மைகள் என்ன ? இவற்றைப் பின்பற்றாமல் போனால் ஏற்படும் விளைவுகள் என்ன ? நிரப்பு.



எச்சில் துப்பினால் சுற்றுப்புறம் அசுத்தமாகும். நோய் பரவும்.

தண்ணீரை வீணாக்கினால் ______________________________

வரிசை முறையைப் பின்பற்றாவிடில் ______________________________

விலங்குகளைத் ______________________________

______________________________

நீ உன் பள்ளியில் இருந்து கற்றவை . . .

______________________________


______________________________



# 3. பள்ளிக்கு வரும் வழியில்...



நாம் தினமும் பள்ளிக்கு வரும் வழியில் பல வகையான மரங்கள், வண்ண வண்ணப் பறவைகள், வகை வகையான வாகனங்கள், வித விதமான ஓசைகள், பழக்கமான மனிதர்கள், பல்வேறு காட்சிகள் முதலியவற்றைக் கடந்து வருகிறோம். இவற்றின் மூலம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அனுபவத்தைப் பெறுகிறோம்.



இவை, மீனா பள்ளிக்கு வரும் வழியில் பார்த்த காட்சிகள். இதைப் போல நீ பள்ளிக்கு வரும் வழியில் என்னென்ன பார்த்திருக்கிறாய்? அவை, கீழ் உள்ள படங்களில் இருந்தால் அப்படத்தை வட்டமிடு.



நீ பள்ளிக்கு வரும் வழியில் காணும் ஒரு காட்சியைப் படமாக வரை.

தன் வசிப்பிடத்திற்கான வழியைப் பிற உயிரினங்கள் எப்படி அறிகின்றன எனப் பார்ப்போமா?



இரை தேடிச் செல்லும் பறவை, மீண்டும் தன் கூட்டிற்கு எப்படித் திரும்பிச் செல்லும்?
ஒரு வேளை அது காற்றின் வழியாகத் தன் பாதையை அமைத்திருக்குமோ!






மரம் விட்டு மரம் தாவும் குரங்கு, தன் உணவை காட்டில் எப்படித் தேடும்?
மரங்களே அதற்குச் சாலையாகத் தெரியுமோ!



நீரில் வாழும் மீன்கள், கூட்டமாக ஒரே திசையில் செல்வது எப்படி? நீரில் அதற்கான பாதை அமைக்கப்பட்டு இருக்குமோ!



நீ, வீட்டில் இருந்து பள்ளிக்குச் சென்று வரும் வழியை எவ்வாறு அறிவாய்? நாம் செல்லும் வழியில் கோயில்கள், மருத்துவமனை, சந்தை, அஞ்சலகம், காவல் நிலையம், பேருந்து நிலையம், தொடர்வண்டி நிலையம் போன்ற பல இட அடையாளங்கள் உள்ளன.

இந்த அடையாளங்கள், நாள்தோறும் நாம் சென்று வரும்பொழுது நம் மனதில் நன்கு பதிந்து விடுகின்றன. இதனால், நம் வீட்டில் இருந்து பள்ளி போன்ற பல இடங்களுக்கு நம்மால் எளிதில் சென்று வர முடிகிறது. நாம் ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குச் செல்வதற்குச் சாலைகள் பயன்படுகின்றன.

கிராமங்களில் ஒற்றையடிப் பாதைகள் உள்ளன. தார்ச் சாலைகள் கிராமங்களை நகரங்களுடன் இணைக்கின்றன. சாலைகள் மக்களின் போக்குவரத்திற்கும், அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களைக் கொண்டு செல்லவும் பயன்படுகின்றன. சாலைகளில் எப்பொழுதும் போக்குவரத்து மிகுந்து காணப்படுகிறது. நாம் சாலையில் நடக்கும் பொழுது சாலையின் ஓரமாகவும், நடைபாதையைப் பயன்படுத்தியும் நடக்க வேண்டும்.

பெரிய நகரங்களில், சாலையைக் கடப்பதற்கு மேம்பாலங்களும் சுரங்கப் பாதைகளும் அமைக்கப்பட்டு உள்ளன. சாலையில் பாதசாரிகள் (நடந்து செல்பவர்கள்) சாலையைக் கடக்கும் இடமும் அமைக்கப்பட்டு இருக்கும்.

பள்ளிக்கு வரும் வழியில் அறிமுகம் அற்ற மனிதர்களிடம் பேசக் கூடாது. அவர்கள் தரும் பரிசுகளையோ, உணவுப் பொருள்களையோ வாங்கக் கூடாது.

உன்னுடைய நண்பர்கள் உன் வீட்டிற்கு வர நீ சில அடையாளங்கள் சொல்வாய் அல்லவா ? இன்னும் எளிதாக வழி கூற உன் முகவரி உதவும்.

**உனக்கு உன் வீட்டின் முகவரி தெரியுமா ?**

பெயர்: ________________________________

தந்தை பெயர்: ________________________________

வீட்டு எண்: ________ தெருவின் பெயர் : ________________

ஊர்: ________________ மாவட்டம் : ________________

மாநிலம் : ________________________________

அஞ்சல் குறியீட்டு எண் : ________________________





உன் முகவரியை எப்பொழுதும் மறக்கக் கூடாது. உனக்கு வீட்டிற்கு வழி தெரியாத நேரங்களில் முகவரி கை கொடுக்கும். உன் வீட்டிற்குக் கடிதங்கள் வந்து சேரவும் முகவரி தேவை.

நம் வீட்டை மற்றவர்கள் எளிதில் அடையும் வகையில் அடைமொழியுடன் வழி கூறுவோமா ?



பச்சைவண்ண மாடி வீடு, பெரிய ஆலமரம், அதன் அருகில் உள்ள புது வீடு, மல்லிகைச் செடி உள்ள வீடு. இருப்புப்பாதைக்கு அருகில் உள்ள வீடு. ரோஜாச்செடி நிறைய உள்ள வீடு. இன்னும் பல வகைகளில் அடைமொழியுடன் நீ வசிக்கும் வீடு எங்குள்ளது எனக் கூறமுடியும் அல்லவா ? வீடு என்பது, நமக்கு பார்க்க, கேட்க, பழக, உணர பல அனுபவங்களைத் தருகிறது.



**இது போல உனக்குப் பிடித்த வகையில் உன் வீட்டிற்கு வழி கூற முயன்று பார்.**

இடங்களை அறிய இன்னொரு எளிய வழி, வலப்பக்கம் மற்றும் இடப்பக்கங்களை அறிதல். ஓர் எளிய விளையாட்டு. உன் நண்பர்களுடன் விளையாடு. இதன் பெயர்,

**'கண்ணாடி முன்னாடி'**



நீயும், உன் நண்பனும் நேருக்கு நேராக ஒருவரை ஒருவர் பார்த்து நில்லுங்கள். நீ உன் நண்பனையும், உன் நண்பன் உன்னையும் முகம் பார்க்கும் கண்ணாடியாக நினைத்துக் கொள்ளவும்.

நீ வலது கையைத் தூக்கு. உன் நண்பன் எந்தக் கையைத் தூக்க வேண்டும்? ______________________



நீ உன் இடது காதைத் தொடு, உன் நண்பன் எந்தக் காதைத் தொட வேண்டும்? ______________________

இந்த விளையாட்டைத் தொடர்ந்து விளையாடுங்கள்.

நீ வீட்டை விட்டு அதிகம் வெளியில் செல்வது பள்ளிக்குத்தான். உனக்கு பள்ளியின் முகவரி தெரியுமா ?

பள்ளியின் பெயர் : ______________________________

தெரு: ______________________________

ஊர்: ______________ மாவட்டம் : ______________

மாநிலம் : ______________ அஞ்சல் குறியீட்டு எண் : ______________



உன்னைப் போல் கலை மூன்றாம் வகுப்பில் படிக்கிறாள். தினமும் தனது தோழிகள் ஆயிஷா, மேகலாவுடன் பள்ளிக்குச் செல்வாள். அன்று மழை தூறிக்கொண்டிருந்தது. அவள் குடை பிடித்துக்கொண்டு சென்றாள். அவர்கள் குளத்துக்கு அருகில் செல்லும் போது கொரக்... கொரக்...... கொரக்......எனத் தவளை கத்தியது. குளக்கரையில் கொக்கு ஒன்றைப் பார்த்தனர்.













கலை தவளை போல் தாவிக் காட்டினாள். மேகலா கைகளைத் தூக்கிக் கொக்கு போல் பறக்க முயன்றாள். “நான் இந்தப் பறவையை எங்கள் தோட்டத்தில் பார்த்தேன்,” என்றாள் கலை. “தவளை போலத் தாவுவதை நிறுத்து. நீ நனைந்து விட்டாய்,” என்றாள் ஆயிஷா. மழை நின்று சூரியன் தெரிந்தது.






அவர்களது நிழல் அவர்களுக்கு முன் விழுந்தது. “நான் உன் நிழலைத் தொட்டுவிட்டேன். நீ, என் நிழலைத் தொடு பார்க்கலாம் ?”, என்றாள் ஆயிஷா. அவர்கள் குதித்தும் ஓடியும் ஒருவர் நிழலை ஒருவர் தொட முயன்றனர்.

பள்ளி வரும்போது நீ உன் நிழலைப் பார்த்திருக்கிறாயா ? உனக்கு எந்தப் பக்கத்தில் ? ______________.





வயலைத் தாண்டி அய்யனார் கோயில். அடுத்தது மாந்தோப்பு , தோப்பு முழுவதும் மாங்காய்கள் காய்த்திருந்தன. “எனக்கு மாங்காய் சாப்பிடணும் போல இருக்கு,” என்றாள் கலை.



தோப்புப் பக்கத்தில் ஒரு குட்டி நாயும் அவர்களுடன் சேர்ந்து கொண்டது. பேசிக் கொண்டே தார்ச் சாலையை அடைந்தனர். ஒரு பேருந்து வந்தது. குமரன் அதில்தான் தினமும் பள்ளிக்கு வருவான்.





சாலையைத் தாண்டி ஒரு  பெட்டிக்கடை. அங்குதான் சாலையின் குறுக்கே வெள்ளைக்கோடு போடப்பட்டிருக்கும். சாலையின் ஓரம் காத்திருந்து வாகனம் எதுவும் வராதபோது சாலையைக் கடந்தனர். மணி அடிக்கும் நேரத்தில் பள்ளிக்குள் நுழைந்தனர்.




கலை, மேகலா, ஆயிஷா பள்ளி செல்லும் வழியில் பார்த்தவற்றைப் பட்டியலிடு.

________________ ________________

________________ ________________

________________ ________________

கலையைப் போல் கனி பள்ளிக்குச் செல்லும் வழியை வரைபடமாக வரைந்துள்ளாள். வரைபடத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்.


கனியின் வரைபடம்
இருப்புப் பாதை
வ
மே
கி
தெ
கனியின் வீடு
தண்ணீர்த் தொட்டி
ஆறு
கடை
கடை
தேவாலயம்
கிணறு
ரவி வீடு
கலையின் வீடு
கபீரின் வீடு
வீடு
கோயில்
வீடு
மசூதி
கடை
கடை
பூங்கா
பேருந்து நிறுத்தம்
மைதானம்
பள்ளி

☞ கனி வீட்டில் இருந்து பள்ளிக்கு வரும் வழியை வண்ணக் கோடிட்டுக் காட்டு.

☞ ரவிக்குப் பள்ளி செல்ல இரண்டு வெவ்வேறு வழிகளைக் கோடிட்டுக் காட்டு.

☞ கபீர் வீட்டில் இருந்து பள்ளிக்கு வரும் வழியில் அவனுக்கு இடப்பக்கம் உள்ளவை

______________________________

☞ கனி பள்ளிக்குச் செல்ல எத்தனைத் திருப்பங்களைக் கடக்க வேண்டும்?

☞ படத்தில் இருந்து ஒரு வீட்டைத் தேர்ந்தெடு. அதன் அருகில் உன் பெயரை எழுது.

☞ படத்தில் உள்ள உனது வீட்டில் இருந்து பள்ளிக்கு வரும் வழியை அம்புக் குறியிட்டுக் காட்டு. வேறு ஒரு மாற்று வழியையும் காட்டு.

மாணவர்கள் நான்கு குழுக்களாகப் பிரிந்துகொள்ளுங்கள். ஒவ்வொரு குழுவும் வரைபடத்தைப் பார்த்து இது போல் மேலும் பல கேள்விகளை நீங்களே உருவாக்குங்கள். ஒரு குழு உருவாக்கிய கேள்விக்கு மற்ற குழுக்கள் விடை கண்டறியுங்கள்.



உன் பள்ளி உன் வீட்டிற்கு அருகிலா? தொலைவிலா? அருகில் தொலைவில் என்பதை எவ்வாறு அறிந்து கொள்வாய்? கூறு.

நீ பள்ளிக்கு வரும் பொழுது பார்ப்பவை

☞ வலப்பக்கம் ______________________________

______________________________

☞ இடப்பக்கம் ______________________________

______________________________

தினமும் உன்னுடன் சேர்ந்து பள்ளிக்கு வருபவர்கள் யார் யார்?



❖ ______________________________

❖ ______________________________

❖ ______________________________

உன் பள்ளியில் படிக்கும் நண்பர்கள் யாரேனும் உன் வீட்டிற்கு அருகில் உள்ளார்களா? பெயர்களை எழுது. ______________________________

பள்ளிக்குச் செல்லும் பொழுது நீ பார்த்த, மறக்க முடியாத நிகழ்ச்சி ஒன்றைக் கூறு.

உன் ஊரில் உள்ள நீர் நிலைகளை ✓ செய்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆறு | ☐ | குளம் | ☐ | கிணறு | ☐ | கைஅடிக்குழாய் | ☐ |
| ஏரி | ☐ | குட்டை | ☐ | குழாய் | ☐ | நீர் நிலை எதுவும் இல்லை | ☐ |

வீட்டிற்கு வெளியில் செல்லும்போது வானிலையைக் கவனித்து இருக்கிறாயா ? இன்று வானிலை எவ்வாறு இருந்தது ? ✓ செய்.

| தேதி | வெப்பம்  | மித வெப்பம்  | காற்று  | மேக மூட்டம்  | மழை  | குளிர்  |
|---|---|---|---|---|---|---|
| நேற்று | | | | | | |
| இன்று | | | | | | |

பள்ளி செல்லும் வழியில் என்னென்ன தொழில் செய்பவர்களை நீ பார்க்கிறாய் ?



______________________

______________________


______________________

______________________



நீ வழியில் பார்க்கும் காட்சிகளைப் பட்டியல் இடு.


| கட்டடங்கள் | மரங்கள் | விலங்குகள் | பொருள்கள் |
|---|---|---|---|
| அஞ்சலகம் | வேப்ப மரம் | நாய் | குப்பைத் தொட்டி |
| | | | |
| | | | |
| | | | |



## யோசி! யோசி!! செய்.




இரண்டு நாட்கள் நீ பள்ளிக்குச் செல்லும் பாதையைக் கூர்ந்து கவனிக்கவும். வழியில் காணும் சில இடங்களுக்கான குறியீடுகள் கொடுக்கப்பட்டு உள்ளன.



இது போல் மற்ற இடங்களுக்கான குறியீடுகளை நீயே உருவாக்கிக் கொள்.

## வரைபடத்தை வரையலாமா ?

எனது பள்ளிக்குச் செல்லும் வழி. நானே வரைந்த வரைபடம்.





# 4. திசைகளை அறிவோம்...




கவிதா, மலர் இருவரும் ஒரே பள்ளியில் படிக்கின்றனர். தாங்கள் வீட்டில் இருந்து பள்ளிக்குச் செல்ல எந்தப் பக்கம் திரும்ப வேண்டும் என்பதில் இருவருக்கும் விவாதம். கவிதா, "நாம் இடப்பக்கம் திரும்பவேண்டும்," என்றாள். மலர், "இல்லை, இல்லை. வலப்பக்கம்தான்," என்றாள். பள்ளி செல்லும்வரை விவாதம் நீண்டது.



இருவரும் ஆசிரியரின் வருகைக்காக ஆவலுடன் காத்திருந்தனர். ஆசிரியர் வகுப்பறைக்குள் நுழைந்தவுடன் அவரிடம் ஓடினர். "டீச்சர், பள்ளிக்கு என் வீட்டில் இருந்து எந்தப் பக்கம் திரும்பி வர வேண்டும்? இடப் பக்கம்தானே?", என்றாள் கவிதா. "இல்லை, வலப்பக்கம்தான்," என்றாள் மலர். ஆசிரியர் சிரித்துக்கொண்டே, "இருவர் கூறுவதும் சரி," என்றார். ஆசிரியர் ஏன் அவ்வாறு கூறினார்? உன்னால் கண்டுபிடிக்க முடிகிறதா?

கவிதாவும், மலரும் எதிர் எதிர் வீட்டில் வசிக்கின்றனர். கவிதா வீட்டின் வெளியே வந்து இடப்பக்கம் திரும்பி பள்ளி செல்ல வேண்டும். மலர் தன் வீட்டின் வெளியே வந்து வலப்பக்கம் திரும்ப வேண்டும். வரைபடத்தில் கவிதா வீடு எது? மலர் வீடு எது? கண்டுபிடியுங்கள். பெயர் எழுதுங்கள்.





## ஒரு விளையாட்டு விளையாடலாமா ?



எல்லோரும் இருக்கும் இடத்திலேயே எழுந்து நில்லுங்கள். வகுப்பில் உனக்கு முன்னால் உள்ளது என்ன / யார் ? ____________________

இப்பொழுது உன் இடப்பக்கம் திரும்பு.

அங்கு உள்ளது ____________________

மீண்டும் இடப்பக்கம் திரும்பு.

நீ இப்பொழுது பார்ப்பது ____________________






மறுபடியும் இடப்பக்கம் திரும்பு.

அங்குள்ளது ____________________

மீண்டும் இடப்பக்கம் திரும்பு.

அங்கு ____________________



இப்பொழுது நீ இருக்கும் இடத்திலேயே உன்னை ஒரு சுற்றுச் சுற்றி இருப்பாய். இதைப் போலவே வலப்பக்கமும் செய்து பார்.



### ஆசிரியருக்கு:

மாணவர்கள் ஒவ்வொரு முறை இடது புறம் திரும்பும் பொழுதும், பார்க்கும் பொருள் அல்லது நபர்களை உற்று நோக்கி நினைவில் கொள்ளச் செய்யவும். பின்னர், புத்தகத்தில் அதற்குரிய இடத்தில் எழுதச் செய்யவும்.

ஓர் இடம் எங்கு உள்ளது, அதை எப்படிச் சென்று அடைவது என்பதை அறிய திசைகளும் வரைபடங்களும் உதவுகின்றன. உங்கள் ஊரில் உள்ள இடங்களுக்கு யாரேனும் வழி கேட்டால், உங்களால் உதவ முடியுமா? திசைகளை அறிந்தால் வழி கூறுவது எளிது. எங்கு சென்றாலும் திசைகளைப் பற்றி அறிந்திருக்க வேண்டும்.

நீங்கள் திசைகளை அறிந்துகொள்ள . . . காலையில் சூரியனைப் பார்த்து நில்லுங்கள். இரண்டு கைகளையும் பக்கவாட்டில் நீட்டுங்கள்.



சூரியன் உதிப்பது கிழக்கு,
அதன் எதிர்புறம் இருப்பது மேற்கு,
வலக்கைப் பக்கம் தெற்கு,
வாதம் வேண்டாம் இதற்கு,
இடக்கைப் பக்கம் வடக்கு,
போதும் கையை மடக்கு.




நாம் செல்லும் இடத்திற்கு ஏற்பத் திசையை அறிய இவை உதவுகின்றன.

நான்கு திசைகளை ஆசிரியர் கூறியவுடன் கவிதா, “டீச்சர், மலர் பள்ளிக்கு வர வலப்பக்கம் திரும்பினாள், நான் இடப்பக்கம் திரும்பினேன். இடத்திற்கு இடம் மனிதர்களுக்கு மனிதர் திசைகள் வேறுபடுமா?” எனக் கேட்டாள்.

ஆசிரியர் சிரித்துக்கொண்டே சில படங்களைக் காட்டினார். சூரியனை மையமாகக் கொண்டு அப்பு கண்டறிந்த திசைகளை படத்தைப் பார்த்து நீங்களும் குறியுங்கள்.

## அப்புவுக்கு திசையைக் கூறு.

காலை





______________



______________

கிழக்கு ______________




______________



______________






மேற்கு ______________

______________

மாலை




______________


சமூக அறிவியல்

கவிதாவிற்கு இப்பொழுதுதான் திசைகளைப் பற்றிப் புரிந்தது. “நானும் மலரும் பள்ளிக்கு வரும் திசை வடக்கு,” என்றாள் கவிதா. மலரும் கவிதாவும் வீட்டிலிருந்து பள்ளிக்கு வடக்குத் திசையில் செல்கின்றனர். வீட்டிலிருந்து கவிதா இடப்புறம் திரும்புகிறாள். மலர் வலப்புறம் திரும்புகிறாள். அப்படி எனில், அவர்கள் வீடு சாலைக்கு எந்தத் திசையில் உள்ளது ?

கவிதா வீடு சாலைக்கு ____________________ திசையில் உள்ளது.


மலர் வீடு சாலைக்கு ____________________ திசையில் உள்ளது.




எப்பொழுதும் வரைபடம் வரையும் பொழுது குறிப்பேட்டின் மேல் பகுதியை வடக்குத் திசையாகக் கொள்.

குறிப்பைப் படித்துப் பெயர்ப் பலகையை எழுது.




படத்தில் உள்ள வீட்டின் மேல் உன் விரலை வை.

- வீட்டில் இருந்து நேராக வடக்கு நோக்கி விரலை நகர்த்து. சந்தையை அடைவாய்.
- வீட்டில் இருந்து மேற்கு நோக்கி விரலை நகர்த்து. தொடர்ந்து வடக்கு நோக்கிச்செல். அதுதான் பூங்கா.
- வீட்டில் இருந்து கிழக்கு நோக்கிச் செல். தொடர்ந்து தெற்கு நோக்கிச்செல். இறுதியில் வருவது தென்னந்தோப்பு.
- வீட்டில் இருந்து நேராகத் தெற்கு நோக்கிச் செல். அங்கு இருப்பது விளையாட்டு மைதானம்.
- விளையாட்டு மைதானத்தில் இருந்து கிழக்கே சென்றால் பள்ளி வரும்.
- விளையாட்டு மைதானத்திற்கு மேற்கே உள்ளது பொருட்காட்சி.

## திசைகாட்டும் கருவி



நிலத்திலேயே நம்மால் சில வேளைகளில் திசைகளை அறிய முடிவதில்லை. நான்கு புறமும் நீராக இருக்கும் கடலை நினைத்துப் பாருங்கள். கடலில் பயணம் செல்வோர் எப்படித் திசைகளை அறிந்துகொள்கிறார்கள்? அதற்குப் பயன்படுவதுதான் திசை காட்டும் கருவி. இதன் காந்த முள் எப்பொழுதும் வடக்கு நோக்கியே இருக்கும். இதுவே, கடல் பயணம் செல்வோர் திசைகளை எளிதில் அறிய உதவுகிறது.

திசைகளை அறிய சூரியன் எவ்விதம் உதவுகிறது?

நான்கு அடிப்படையான திசைகள் எவை?





## வாழிடம் தேடி...

மாயனூர் என்று ஒரு சிறிய கிராமம். அந்த ஊரின் வடக்குப் பக்கத்தில் ஒரு வயல். வயலுக்குக் கிழக்கே ஒரு சிறிய குளம். அந்தக் குளத்தின் கரையில் பல பறவைகள் குடும்பத்தோடு வாழ்ந்துவந்தன. அவற்றில் வாத்து, கொக்கு, மீன்கொத்தி, மரங்கொத்தி, காகம் ஆகியவை நண்பர்கள்.

கோடைக்காலம் வந்தது. குளம் வற்றத் தொடங்கியது. எல்லாப் பறவைகளும் கூடின. குளத்தில் தண்ணீர் வற்றிவிட்டதே, இனி என்ன செய்வது? என்று யோசித்தன.

“மாயனூருக்குத் தெற்கில் ஒரு குளம் உள்ளது, அது எப்பொழுதும் வற்றாது. நாம் அங்கே செல்வோம்,” என வாத்து கூறியது.





“ஐயோ! அங்கு வேண்டாம். அங்கே மரமோ, வயலோ கிடையாது. மனிதர்கள் மட்டுமே இருப்பர்,” என்றது காகம்.



“முன்பு ஒரு முறை நான் பறந்து வரும்போது, ஓர் ஆறு ஓடுவதைப் பார்த்தேன். என் நண்பர்களுடன் சென்று, அது எங்கிருக்கிறது எனக் கண்டுபிடித்து வருகிறேன். பிறகு, நாம் அங்கு சென்று வசிப்போம்,” எனக் கூறியது கொக்கு.






கொக்கு, அதன் நண்பர்களுடன் மாயனூரின் கிழக்குப் பகுதி நோக்கிப் பறந்தது. அங்கு ஓர் ஏரி, அதன் அருகில் வாகன நெரிசல் மிகுந்த சாலை மற்றும் கட்டிடங்களைப் பார்த்தன. பின் அங்கிருந்து மாயனூரின் மேற்குப் பக்கம் நோக்கிப் பறந்தன. மேற்குத் திசையில் செல்லச் செல்ல ஓர் அழகான பெரிய ஆறு ஓடுவதைப் பார்த்தன. அதன் அருகில் பச்சைப் பசேலென வயல் வெளியும், அடர்ந்த மரங்களும் இருக்கக் கண்டு, மகிழ்ச்சி அடைந்தன.

மற்றப் பறவைகளிடம் தாங்கள் கண்டுபிடித்த இடத்தைப் பற்றிக் கூறின. அனைத்துப் பறவைகளும் அந்த ஆற்றுப் பகுதிக்கு தங்கள் இருப்பிடத்தை மாற்றிக் கொண்டன. தண்ணீர் பஞ்சமின்றி மகிழ்ச்சியுடன் வாழ்ந்தன.





வரைபடத்தில், பறவைகள் தேடிய நீர் நிலைகளையும் அதன் திசைகளையும் கண்டுபிடித்து வரைக.




பக்கம் 21ல் இருக்கும் படத்தைப் பார்.

- கனி, பள்ளிக்கு வரும் திசையைக் கூறு.
- ஆற்றுக்கு மேற்கில் என்ன உள்ளது ?
- கோயிலுக்கு ____________________ திசையில் கபீரின் வீடு உள்ளது.
- தேவாலயத்திற்கு ________________ திசையில் இருப்பது இருப்புப்பாதை.

# 5. பார்த்து நடக்க வேண்டும்



இரவில் மழை பெய்திருந்தது. காலையில் பள்ளியின் ஈர மைதானத்தில் குழந்தைகள் விளையாடிக்கொண்டு இருந்தனர்.

சில குழந்தைகள் மண்ணில் கோடுகள் போட்டு பாம்...பாம்... என வாகனம் போல ஒலி எழுப்பி ஓடிக்கொண்டு இருந்தனர்.

அப்துல், ஆசிரியரை அழைத்துவந்து அக்கோடுகளைக் காட்டினான். "சாலை போலவே இருக்கிறது பாருங்கள்," என்றான். "மண்ணில் விளையாடியது போதும். எல்லோரும் போய் கைகால்களைக் கழுவிக்கொண்டு வகுப்பிற்கு வாருங்கள்," என்றார் ஆசிரியர்.

வகுப்பிற்குள் நுழைந்த குழந்தைகளை, "என்ன விளையாடினீர்கள் ?", எனக் கேட்டார். "வாகனங்கள் ஓட்டினோம்," என்றனர் ஒரே குரலில். " என்னென்ன வாகனங்களை ஓட்டினீர்கள் ?", என்றார் ஆசிரியர். "பேருந்து, கார், ஆட்டோ, இரயில், மோட்டார் சைக்கிள்," என்றாள் விஜி.



"ஒரே நெரிசல், வண்டி சத்தம். சூரியாவும், ராமுவும் எல்லோர் மேலேயும் தரையில் இருந்து தண்ணீரை அடித்துவிட்டார்கள்," என்றான் அகிலன்.

“அதனால், என் சட்டை மண்கறை ஆயிற்று. ராமுவும் ஐசக்கும் மோதிக் கீழே விழுந்து விட்டார்கள்,” என்றாள் சீதா.



“நான் திரும்ப நினைத்தேன். ஆனால், ஐசக் கைகளை நீட்டிக்கொண்டு ஓடிவந்ததால் கீழே விழுந்துவிட்டேன்,” என்றான் ராமு.



“எல்லோரும் வாகனத்தில்தான் சென்றீர்களா ? யாரும் நடந்து போகவில்லையா ?”, எனக் கேட்டார் ஆசிரியர்.

“நடக்க இடமே இல்லை. யாரும் யாரையும் கவனிக்கவில்லை. அவரவர் போக்கில் ஓடினர்,” என்றான் கண்ணன்.



“ சாலையிலும் இப்படித்தான் நடக்கிறது. அதனால், நாம் சாலையில் கவனமாகச் செல்ல வேண்டும். சாலையில் போக்குவரத்துக்கு எனச் சில விதிகள் உள்ளன. அவற்றைப் பார்ப்போமா ?

இன்று நீங்கள் விளையாடியதில் இருந்தே தொடங்குவோம். நடந்து செல்பவர்களுக்கான சாலை விதிகள் என்ன ? யாருக்காவது தெரியுமா ?”, எனக் கேட்டார் ஆசிரியர்.



“நடைபாதையைப் பயன்படுத்த வேண்டும்,” என்றாள் சுசீலா.

“ஆனால், என் வீட்டிற்கு அருகில் நடைபாதையே இல்லையே,” என்றாள் மீனா.

"நடைபாதை இல்லாத இடங்களில் சாலையின் ஓரத்தில் நடக்க வேண்டும்," என விளக்கினார் ஆசிரியர்.

"நாம் சாலையில் ஓடக்கூடாது, விளையாடக்கூடாது," என்றான் ஐசக்.


"பள்ளிக்கு வரும்போது, சாலையின் மறுபக்கம் உள்ளவர்களுடன் பேசுவேன். இனி அவ்வாறு செய்யமாட்டேன்," என்றாள் வசந்தி.



"அது மற்றவர்களுக்குக் கவனச் சிதறலை ஏற்படுத்தும், " என்றார் ஆசிரியர்.

" நான் இருப்புப்பாதையைக் கடந்து பள்ளிக்கு வருகிறேன், " என்றான் கண்ணன்.

" இருப்புப்பாதையைக் கடக்கும்போது மிகக் கவனமாக இருக்கவேண்டும். ஒருபோதும் இருப்புப்பாதையின் மீது நடக்கக் கூடாது. எச்சரிக்கை விளக்கு போட்டவுடன் எக்காரணத்தைக் கொண்டும் பாதையைக் கடக்க முயலக் கூடாது," என்று அறிவுறுத்தினார் ஆசிரியர்.




"அப்பப்பா, ஏகப்பட்ட விதிகள், எப்படி நினைவில் வைத்துக்கொள்வது ?", என்றான் கவின்.

"நான் கேட்கும் கேள்விகளுக்கு சரியா ? தவறா ? என்று மட்டும் பதில் சொல்லுங்கள், பார்ப்போம் ? ", என்றார் ஆசிரியர்.

சமூக அறிவியல்

## மாணவர்கள் என்ன விடை கூறியிருப்பர் ?

சரி எனில் சிரிக்கும்  முகத்திற்கும்,

தவறு எனில் வருந்தும்  முகத்திற்கும், வண்ணமிடு.

நடை பாதையில் நடத்தல் 

நடைபாதை இல்லாத இடங்களில் சாலையின் ஓரமாக நடத்தல் 

சாலையின் குறுக்கே ஓடுதல் 

சாலைக்கு அருகில் அல்லது சாலையில் விளையாடுதல் 

சாலையில் நடக்கும் பொழுது கைபேசியில் பேசாது இருத்தல் 

சாலையில் விளம்பரப் பலகைகளை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நடத்தல் 

இருப்புப் பாதையின் மீது நடத்தல் 

இருப்புப் பாதையைக் கடக்க எச்சரிக்கை விளக்குகளைக் கவனித்தல் 

"ஆமாம்! உண்மையாகவே, சாலை விதிகளை நினைவில் வைத்துக் கொள்வது ஒன்றும் கடினம் இல்லை," சிரித்தான் கவின்.

அடுத்த நாள் ஆசிரியர் போக்குவரத்துக் காவலரை வகுப்பிற்கு அழைத்து வந்தார். அவரிடம் "சாலையைப் பாதுகாப்பாகக் கடப்பது எப்படி ?", எனக் கேட்டாள் மீனா. காவலர், தான் கொண்டு வந்திருந்த சாலை பாதுகாப்பு விதிகளுக்கான படத் தொகுப்பைக் காட்டி அதற்குரிய விளக்கம் அளித்தார்.






## படத் தொகுப்பும் அதற்குரிய விளக்கங்களும்

நகரங்களில் நடைபாதையில் நடக்க வேண்டும். நடைபாதை இல்லாத இடங்களில் சாலை ஓரங்களில் நடக்க வேண்டும்.



வாகனங்களுக்கான எச்சரிக்கை விளக்கு.



→ சிவப்பு — நில்

→ மஞ்சள் — கவனி

→ பச்சை — செல்


பாதசாரிகளுக்கான எச்சரிக்கை விளக்கு.

நில் — சிவப்பு ←

செல் — பச்சை ←



இவை நகரங்களில், கூட்டம் மிகுந்த சாலை சந்திப்புகளில் வைக்கப்பட்டு இருக்கும். இதைக் கவனித்தே பாதசாரிகள் சாலையைக் கடக்க வேண்டும்.



பாதசாரிகளுக்கான பச்சை விளக்கு ஒளிர்ந்ததும் சாலையைக் கடக்க வேண்டும். சாலையை அதன் குறுக்கே போடப்பட்டு உள்ள வெள்ளைக் கோட்டின் மேல்தான் கடக்க வேண்டும்.

எச்சரிக்கை விளக்கு இல்லாத இடங்களில் சாலையின் குறுக்கே கடக்கும் பொழுது இருபுறமும் பார்க்க வேண்டும். முதலில் வலதுபுறமும், பின் இடதுபுறமும் பார்க்க வேண்டும். வாகனங்கள் எதுவும் வராத பொழுது சாலையைக் கடக்க வேண்டும்.

வண்டியை ஓட்டுபவர்கள் சிறிய சாலையிலிருந்து முக்கிய சாலை சந்திப்பிற்கு வரும் பொழுது வண்டியின் வேகத்தைக் குறைக்க வேண்டும். பிரதான சாலையில் செல்லும் வாகனங்களுக்கு வழிவிட வேண்டும்.

## சாலையில் பாதுகாப்பாகச் செல்ல சில எச்சரிக்கைக் குறியீடுகள்.



பாதுகாக்கப்பட்ட இருப்புப்பாதை



பாதுகாக்கப்படாத இருப்புப் பாதை



பள்ளி உள்ளது



வேகத் தடை



பள்ளம் உள்ளது



இடப்பக்க வளைவு



வலப்பக்க வளைவு



பேருந்து நிலையம்



ஒலி எழுப்பாதே

இது போன்று இடைக்கோடு போடப்பட்டிருப்பின் அதைச் செய்யக்கூடாது என்று பொருள்.

## ஓட்டுநர் ஏன் சத்தம் இடுகிறார் ?



எது சரி ? எது தவறு ? குறி. தவறு எனில் ஏன் எனக் கூறு.


















படத்தில் கொடுக்கப்பட்டு உள்ள எண்ணுக்கு உரியவற்றைக் கண்டறிந்து சரியான பெயருடன் பொருத்தவும்.

| | | | |
|---|---|---|---|
| தெரு விளக்கு | ◯ | ◯ | பெயர்ப் பலகை |
| எச்சரிக்கை விளக்கு | ◯ | ◯ | பாதசாரிகள் சாலையைக் கடக்கும் கோடு |
| நடைபாதை | ◯ | ◯ | போக்குவரத்துக் காவலர் |


எந்த இடத்தில் உள்ள பாதசாரிகள், தற்போது

பாதையைக் கடக்கக் கூடாது – சிவப்பு வண்ணமிடு

யார் பாதையைக் கடக்கலாம் – பச்சை வண்ணமிடு



எந்தக் குறியீடு எந்தப் பலகையில் இடம் பெற வேண்டும்?




# உங்கள் நினைவுக்கு . . .!

I. சரியான செயல்கள் எவை ?
சரி அல்லாத செயல்கள் எவை ? ( ✔ ) ( ✕ )குறி.

1. ஈ மொய்த்த பண்டங்களைச் சாப்பிடுதல் ( )
2. அதிகாலையில் எழுந்திருத்தல் ( )
3. பொது இடங்களில் எச்சில் துப்புதல் ( )
4. விலங்குகளிடம் அன்பு காட்டுதல் ( )
5. பிறர் பொருளை அனுமதியின்றி எடுத்தல் ( )
6. விளையாடிய பின் கை கால்களைக் கழுவுதல் ( )
7. தம் பொருள்களை உரிய இடத்தில் வைத்தல் ( )
8. வகுப்பறை மேசையின் மீது ஏறி விளையாடுதல் ( )
9. பள்ளியின் சுவர்களில் கிறுக்குதல் ( )
10. சக மாணவனுக்கு உதவி செய்தல் ( )

II. வண்ணமிடு.

எச்சரிக்கை விளக்கில் குறிப்புக்கு ஏற்ப வண்ணமிடு.




III. விடையளி

1. பொது இடங்களில் நாம் என்னென்ன விதிமுறைகளைப் பின்பற்றுகிறோம் ?
2. நகரங்களில் சாலையின் குறுக்கே வெள்ளைக் கோடுகள் ஏன் போடப்பட்டு உள்ளன ?
3. உன் தெருவில் வசிப்பவர்களுக்கு நீ என்னென்ன வகையில் உதவிகள் செய்வாய் ?
4. நான்கு அடிப்படை திசைகள் எவை ? உன் பள்ளியின் இருப்பிடத்தை திசைகளுடன் விவரி.
5. சாலையைக் குறுக்கே கடக்கும் பொழுது கவனிக்க வேண்டியவை எவை ?

IV. உன் பள்ளியை வரைபடமாக வரை.